பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 12 2024 7 15 செய்தி ஆசிரியர்

செவ்வாய்கிழமை இரவு ஜெ காமராஜ்

வணக்கம், ஆகாஷவாணி

**TUNE**

செய்திகள் - வாசிப்பவர் - பிரியதர்ஷினி

தலைப்புச் செய்திகள்

- அனைத்துத் துறைகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்பை உறுதி செய்ய மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- வங்கித்துறையின் நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கான சட்டத்திருத்த மசோதாவை மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று மக்களவையில் தாக்கல் செய்தார்.
- மாற்று எரிபொருளாக எத்தனால், மெத்தனால் உள்ளிட்ட உயிரி எரிபொருட்களை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.
- இந்தியா—சீன எல்லைப்பகுதியில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதன் மூலமே இரு நாடுகளுக்கும் இடையேயான நலுறவை வலுப்படுத்த முடியும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.
- ஆசிய ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

பிரதமர் -மாற்றுத்திறனாளி

அனைத்துத் துறைகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்பை உறுதி செய்ய மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சுகம்யா பாரத் அபியான் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒன்பது ஆண்டுகள் நிறைவையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், பாராலிம்பிக் போட்டிகளில் இந்தியா சாதனை படைத்து மாற்றுத்திறனாளி சகோதர சகோதரிகள் நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக கூறியுள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகாரத்தை உறுதி செய்யும் வகையில் கடந்த 2016-ஆம் ஆண்டு அவர்களின் உரிமைக்கான சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்ததாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

எல்கே —ச திலலி / 12

குடியரசுத்தலைவர் - விருது

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளுகான தேசிய விருதுகளை 33 பேருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வழங்கினார்.

குடியரசுத் தலைவரிடம் விருது பெற்ற சென்னையை அடுத்த பம்மலில் உள்ள அன்னை தெரசா அறக்கட்டளை நடத்தி வரும் கவிதா, எமது செய்திப்பிரிவுக்கு அளித்த பேட்டியில், மாற்றுத்திறனாளிகளுக்கான நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை தமது அறக்கட்டளை மூலம் ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

<u>( சவுண்ட்பைட் - கவிதா ) ---48 செகண்ட்</u>

எல்கே /ச திலலி /டெஸ்க் / 8+13=21

வங்கி — மசோதா

மக்களவையில் இன்று வங்கி சட்டத்திருத்த மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வங்கிகளில் கணக்கு வைத்திருப்போர் நான்கு பேர் வரை வாரிசுகளாக நியமனம் செய்வதற்கு இந்த சட்டத்திருத்தம் வகை செய்கிறது.

இதனை தாக்கல் செய்து பேசிய மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வங்கித்துறை நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த சட்டத்திருத்தம் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

வாடிக்கையாளர்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்படுவதோடு வங்கி சேவையின் தரமும் உயர்த்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

வங்கிகளில் பணத்தை இருப்பு வைத்திருப்பவர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் உரிய பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் இது வகை செய்யும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இந்த மசோதா மீதான விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு கௌரவ் ககோய், வங்கி சட்டங்கள் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் உகந்த வகையில் அமைய வேண்டுமென்று வலியுறுத்தினார்.

வங்கி – மசோதா - 2

பிஜேபி உறுப்பினர் திரு சம்பீத் பத்ரா, வங்கித் துறையில் அரசு மேற்கொண்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகளை வரவேற்பதாகக் கூறினார்.

எல்கே /ச தில்லி / 17

நிதின் கட்கரி

மாற்று எரிபொருளாக எத்தனால், மெத்தனால் உள்ளிட்ட உயிரி எரிபொருட்களை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று மாற்று எரிசக்தியை நடைமுறைப்படுத்துவது குறித்த மாநாட்டில் உரையாற்றிய அவர், பெட்ரோலிய எரிபொருட்களின் இறக்குமதியை கணிசமாக குறைப்பதன் மூலம் இந்திய பொருளாதாரத்தை ஐந்து ட்ரில்லியன் டாலராக உயர்த்த வேண்டுமென்ற பிரதமர் திரு நரேந்திரமோடியின் தொலைநோக்குப் பார்வை நிறைவேறும் என்றார்.

உயிரி எரிபொருட்கள் பயன்பாட்டின் மூலம் காற்று மாசு-வின் அளவு கணிசமாக குறையும் என்றும், வேளாண்துறை மேம்படுத்தப்படும் என்றும் கூறினார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் புதுதில்லியில் உள்ள பேருந்துகள் அனைத்தும் மின்சார பேருந்துகளாக மாற்றப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நிதின் கட்கரி - 2

சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் மூலம் தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்க முடியும் என்றும், நீடித்த வளர்ச்சியை உறுதி செய்ய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வேலைவாய்ப்பு மற்றும் முதலீடுகள் உயிரி எரிபொருட்கள் பயன்பாட்டின் மூலம் அதிகரிக்கும் என்றும் திரு நிதின் கட்கரி கூறினார்.

எல்கே /ச தில்லி / 16

ஜெய்சங்கர்

இந்திய—சீன எல்லைப்பகுதியில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதன் மூலமே இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவை வலுப்படுத்த முடியும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

மக்களவையில் அவர் இன்று அளித்த அறிக்கையில், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் படிப்படியாக முன்னேறி வருவதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 2020-ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் லடாக்கில் இரு நாட்டு ராணுவத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதை அடுத்து அமைதியும், நல்லிணக்கமும் பாதிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இதனையடுத்து இரு நாடுகளின் எல்லைப்பகுதிகளிலும் ரோந்து பணிகள் தீவிரப்படுத்தப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

கோவிட் பெருந்தொற்று இருந்தபோதிலும் இந்திய ராணுவத்தினர் சீன எல்லைப்பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்யதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெய்சங்கர் - 2

படிப்படியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாக கிழக்கு லடாக் பகுதியில் இருதரப்பிலும் ராணுவ வீரர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, அமைதிக்கான சூழல் உருவாகி வருவதாக அவர் கூறியுள்ளார்.

எல்லைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண இந்தியாவும் - சீனாவும் பல ஆண்டுகளாக முயற்சி செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லைப்பகுதியில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொண்டுள்ளதாகவும் திரு ஜெய்சங்கர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எல்கே /ச          தில்லி /  21

நட்டா — சுகாதாரம்

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நாடு முழுவதும் ஒரு லட்சத்து 73 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்களை அரசு நிறுவியுள்ளதாக கூறினார்.

தேசிய தொலைபேசிவழி மனநல ஆலோசனை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருவதாகவும், இதற்காக நாடுமுழுவதும் அமைக்கப்பட்டுள்ள 53 மையங்களில், 20 பிராந்திய மொழிகளில் ஆலோசனைகள் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பிரியா — சி          தில்லி / 9

சிவ்ராஜ் சிங் சௌகான் - வேளாண்

வேளாண் விளைப்பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு மூன்று மடங்கு உயர்த்தியுள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று எழுத்துமூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, விளைப்பொருட்களின் உற்பத்தி செலவில் 50 சதவீதம் லாபம் ஈட்டும் வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயித்துள்ளதாக கூறினார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ஆயிரத்து 310 ரூபாயாக இருந்ததாகவும், தற்போது அது குவிண்டாலுக்கு 2 ஆயிரத்து 300 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோல், சோளம், கம்பு மற்றும் ராகி ஆகியவற்றின் குறைந்தபட்ச ஆதரவு விலையும் காங்கிரஸ் ஆட்சியின்போது வழங்கப்பட்டதை காட்டிலும், தற்போது இருமடங்கு உயர்த்தப்பட்டுள்ளதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

பிரியா — சி தில்லி / 14

மக்களவை - இணைய குற்றம்

இணையதள குற்ற தடுப்பு நிர்வாக கட்டமைப்பு சிறப்பாக செயல்பட்டதால் கடந்த 2021-ஆம் ஆண்டு முதல் மூவாயிரத்து 500 கோடி ரூபாய் நிதி மோசடி தடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இன்று உள்துறை இணை அமைச்சர் திரு சஞ்ஜய்குமார் அளித்த எழுத்துப்பூர்வமான பதிலில், நிதி மோசடிக்காக பயன்படுத்தப்பட்ட ஆறு லட்சத்து 69 ஆயிரம் சிம்கார்டுகளும், ஒரு லட்சத்து 32 ஆயிரம் செல்போன்களும் செயலிழக்கச் செய்யப்பட்டதாக கூறியுள்ளார்.

இந்திய இணையதள ஒருங்கிணைப்பு மையம் மூலம் 59 ஆயிரம் வாட்ஸ்-அப் கணக்குகளும், ஆயிரத்து 700 ஸ்கைப் முகவரிகளும் தடை செய்யப்பட்டதாக திரு சஞ்ஜய்குமார் தெரிவித்துள்ளார்.

எல்கே /ச தில்லி / 10

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இன்று இந்தியா - மலேசியாவை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

--------

குவாஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

இன்று நடைபெற்ற ஆட்டங்களில் இந்தியாவின் தருண் மனப்பள்ளி, பாரத் ராகவ், ரகு மாரிசாமி ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

---------

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பெங்களூரு அணி – குஜராத் அணியையும், புனே அணி – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

சுதா /ச / 11

குமாரசாமி – வாகனங்கள்

உலகின் மிகப்பெரிய இருசக்கர வாகனங்களின் சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு ஹெச் டி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், கடந்த ஆண்டில் 17 மில்லியனுக்கும் அதிகமான இருசக்கர வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

நாட்டில் கடந்த 2023-24-ஆம் நிதியாண்டில் ஒன்பது லட்சத்து 50 ஆயிரம் மின்சார இருசக்கர வாகனங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இதே நிதியாண்டில் மின்சாரத்தில் இயங்கும் 92 ஆயிரம் பயணிகள் வாகனங்களும், ஆறு லட்சத்து 33 ஆயிரம் மூன்று சக்கர வாகனங்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரியா – சி தில்லி / 11

அன்னபூர்ணா தேவி-மகளிர்

பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை உறுதி செய்வதில் மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்கள் தலைமையிலான வளர்ச்சி என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்றும் வகையில் அரசின் திட்டங்கள் அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

நமோ ட்ரோன் மற்றும் லட்சாதிபதி பெண்கள் திட்டங்களின் மூலம், மகளிர் தலைமை பொறுப்பு வகிப்பதற்கான வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில், மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சகத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், அரசின் மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோரை தண்டிப்பதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளதை திருமதி அன்னபூர்ணா தேவி சுட்டிக்காட்டினார்.

பிரியா – சி தில்லி / 15

வீரேந்திர குமார்-மாற்றுத்திறனாளிகள்

மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகும் வகையிலான உள்ளார்ந்த சமூகத்தை உருவாக்குவதில் அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி, புதுதில்லியில் இன்று பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கிவைத்து பேசிய அவர், மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்புகளை வழங்குவதன்மூலம்,

அவர்களை அதிகாரம் மிக்கவர்களாக மாற்றுவதை நோக்கமாக கொண்டு அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

அவர்களின் உரிமை மற்றும் கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியுடன் உள்ளதாக திரு வீரேந்திர குமார் தெரிவித்தார்.

பிரியா – சி     தில்லி / 10